# சிவாலய அமைப்பின் உண்மை விளக்கம்

சிவாலயம் என்பது சிவ ஆலயம் எனப் பிரிவு பெறும். சிவனிடத்தில் ஆன்மாக்கள் லயிக்கும் இடம் ஆலயம். லயிப்பதாவது இரண்டறக் கலத்தல். சிவம் என்பது நித்யமங்கள ஸ்தானம்; அதுவே பரமோக்ஷமாகிய வீடு. ஆன்மாக்கள், பிறவிப் பெருங்கடலில் புண்ணியம், பாவம் என்னும் அலைகள் மோத, யாக்கையில் இருந்து இன்ப துன்பங்களால் பாதிப்படுபவை. ஆத்மா என்ற பதத்துக்கு, "அத ஸாதத்யகமநே" என்றபடி ஸநா சஞ்சரிப்பவன் என்ற பொருள் வரும். அதாவது ஜனன மரணங்களினுடே அலைந்து எப்போதும் துன்புறுபவன் என்பதைக் குறிக்கும். அப்படியானால் ஆன்மாவுக்குப் பிறவி நீக்கம் எங்ஙனம் கூடும் என்ற கேள்வி எழலாம். "ஸாதத்யகமநே" என்பதை "கத்யார்த்தாநாம் ஜ்ஞாநார்த்தகத்வம்" என்ற நியாயப்படி பார்த்தால், எப்போதும் ஞானமுடையவன் என்ற அர்த்தமும் ஸித்திக்கும். ஆகவே ஆன்மா ஞானமுடையவன்; ஆனால் சிற்றறிவுடையவன்; கிஞ்சிக்ஞன். பரமாத்மா ஸர்வக்ஞன். ஆத்மா ஞானசூன்யனனால் பரமாத்மாவை அறிவதற்கே இடம் இல்லை. ஆதலால் ஆத்மாவுக்கு ஞானம் உண்டு. சிற்றறிவினனான ஆன்மா, பேரறிவினனாகிய பரமாத்மாவை அறிந்து இரண்டறக் கலக்கும்

நிலையை அடையவேண்டும். அதற்கு ஆலய வழிபாடு முதலியவற்றில் ஈடுபட வேண்டும்.

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று”,

“கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்”,

“மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு

வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே”

என்று ஔவையாரும் தாயுமானவரும் கூறியிருக்கிறார்கள்.

மேலும்,

‘தேஹோ தேவாலய: ப்ரோக்தோ ஜீவோ தேவ: ஸநாதந:’

என்றபடி ஆலயம் தெய்வத்துக்கு ஸ்தூல சரீரமாகும். ஸூக்ஷ்ம சரீரம் லிங்கம். ஆகமங்களில், கோயிலில் உள்ள உறுப்புக்களை ஸ்தூல சரீரத்திலுள்ள உறுப்புக்களாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவரத்தை இங்கே பார்க்கலாம்.

கோபுரந்தான் பாதம். துவஜஸ்தம்பம் மூலாதாரம்; இது கணபதியின் ஸ்தானம். அதனால்தான் துவஜஸ்தம்பத்தின் அடியில் கணபதி இருக்கிறார். மூன்று நந்திகள் கோயிலில் இருக்கும். அவை முறையே ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம் என்னும்

ஸ்தானங்கள் ஆகும். இவை பிரம்ம விஷ்ணு ருத்திரர்களுக்குரிய இடங்கள். அர்த்தமண்டபமும் கர்ப்பக்கிருகமும் விசுத்தி, ஆஜ்ஞை என்ற ஸ்தானங்கள். இவை ஈசுவரனும் ஸதாசிவனும் இருக்கும் இடங்கள். விமானமும் ஸ்தூபியும் பாலாதபப் பிரம்மரந்திர ஸ்தானங்கள்; சிவத்துக்கும் பரசிவத்துக்கும் உரிய இடங்கள். இவை சிரஸும் மகுடமுமாகும். பஞ்சப் பிராகாரங்களும் ஒவ்வொரு புறமும் ஒன்றாக வைத்தால் பத்துப் பகுதிகளாகிப் பத்துக் கைகளைக் காட்டும். இன்னும் உள்ள உறுப்புக்களுக்குரிய விவரங்களை ஆகமங்களில் காணலாம்.

“ஸர்வவ்யாபீ மஹேச்வர:” என்ற வேத வாக்கின்படி, எங்கும் நிறைந்த பரம்பொருளை, ஓரிடத்தில் ஆலயம் கொண்டு எழுந்தருளியிருப்பதாகக் கூறுவது முரணாகாதோ என்ற ஐயம் தோன்றும். மரக்கட்டையில் நிறைந்துள்ள அக்கினி அரணி முதலிய சாதனங்கொண்டு கடைந்த இடத்தில் மட்டும் வெளிப்பட்டு ஒளிதருவது போலவும், சூரியனுடைய ஒளிக்கதிர் எங்கும் நிறைந்திருந்தாலும் சூரிய காந்தத்தினிடம் வெளிப்பட்டு மிக்க ஒளியும் வெப்பமும் தருவது போலவும், மந்திர தந்திரங்களால் அழைத்து ஆராதிக்க ஆலயங்களில் திருவுருவங்கொண்டு பரமசிவன் எழுந்தருளி, வழிபடுவோர் வினையகற்றி வரமருளிக்

காட்சி அளிப்பான். இது ஸர்வ வியாபியாகிய தன்மைக்கு முரணாகாது.

ஆலய அமைப்பின் உட்கருத்தைச் சிறிது பார்ப்போம். சைவ சித்தாந்தத்தில் கூறப்பெறும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை ஆலயம் விளக்குகிறது. ஆலயத்தில் மூல லிங்கம், நந்தி, பலிபீடம் என்னும் மூன்றும் நேரே ஒன்றின் முன் ஒன்றாக இருப்பதைக் காண்கிறோம். லிங்கம் பதியையும், நந்தி பசுவையும், பலிபீடம் பாசத்தையும் குறிக்கும். நந்திக்கு முன்னே லிங்கமும் பின்னே பலிபீடமும் இருக்கின்றன. ஜீவாத்மாவான நந்தி உலக மாயையின் பற்றற்றுப் பரமாத்மாவான பதியையே உற்று நோக்குகிறது. இவ்வாறு மலபரிபாகம் பெற்றுச் சத்திநிபாதத்தால் பதி நோக்கமடைந்த பசுவைப் பற்றியிருந்த பாசம் தானாகவே பின்னோக்கி விலகி நிற்பதைப் பலிபீடம் குறிப்பிக்கிறது.

இந்த உண்மைகளை ஆலய வழிபாடு செய்பவர்கள் நன்கு உணரவேண்டும். சைவ சித்தாந்தச் செம்பொருளை விளக்கும் வகையில் ஆலயத்தில் உள்ள அமைப்புக்கள் இருப்பதை அறிந்தே மன்னர்கள் பல பல ஆலயங்களை அமைத்து நித்திய நைமித்திக பூஜைகளும், திருவிழாக்களும் நடைபெறும்படி, பல மானியங்களை அளித்திருக்கிறார்கள்.